# யூலை – 17 – புதன்

**என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே! ஆவரது திருப்பெயரை ஏத்திடு! திபா. 103:1**

---

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 3 : 1–6,9 –12

அந்நாட்களில், மோசே மிதியானின் அர்ச்சகராகிய தம் மாமனார் இத்திரோவின் ஆட்டுமந்தையை மேய்த்துவந்தார். அவர் அந்த ஆட்டு மந்தையைப் பாலைநிலத்தின் மேற்றிசையாக ஓட்டிக்கொண்டு கடவுளின் மலையாகிய ஓரேபை வந்தடைந்தார். அப்போது ஆண்டவரின் தூதர் ஒருமுட்புதரின் நடுவே தீப்பிழம்பில் அவருக்குத் தோன்றினார். அவர் பார்த்தபோது முட்புதர் நெருப்பால் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அம்முட்புதர் தீய்ந்துபோகவில்லை. ”ஏன் முட்புதர் தீய்ந்துபோகவில்லை? இந்த மாபெரும் காட்சியைப் பார்ப்பதற்காக நான் அப்பக்கமாகச்செல்வேன்” என்று மோசே கூறிக்கொண்டார். அவ்வாறே பார்ப்பதற்காக அவர் அணுகி வருவதை ஆண்டவர் கண்டார். ”மோசே, மோசே” என்று சொல்லிக் கடவுள் முட்புதரின் நடுவிலிருந்து அவரை அழைக்க, அவர் ”இதோ நான்” என்றார். அவர், ”இங்கே அணுகிவராதே. உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமானநிலம்” என்றார். மேலும் அவர், ”உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே” என்றுரைத்தார். மோசே கடவுளை உற்றுநோக்க அஞ்சியதால் தம்முகத்தை மூடிக்கொண்டார். இப்போது, இதோ! இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது. மேலும் எகிப்தியர் அவர்களுக்கு இழைக்கும் கொடுமையையும் கண்டுள்ளேன். எனவே இப்போதே போ இஸ்ரயேல் இனத்தவராகிய என்மக்களை எகிப்திலிருந்து நடத்திச்செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்பு கிறேன். மோசே கடவுளிடம், ”பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும் நான் யார்?” என்றார். அப்போது கடவுள், ”நான் உன்னோடு இருப்பேன். மேலும் இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும்போது நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள். நானே உன்னை அனுப்பினேன் என்பதற்கு அடையாளம் இதுவே” என்றுரைத்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும், அருளும் கொண்டவர்.

## நற்செய்தி : மத்தேயு 11 : 25 – 27

அக்காலத்தில், இயேசு: ”தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார் மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்” என்று கூறினார்.

**தியானம்:** கடவுளுடைய எண்ணங்கள் வேறு. மனிதனுடைய எண்ணங்கள் வேறு. கடவுளின் பார்வை வேறு. மனிதனின் பார்வை வேறு. இதுதான் இந்த நற்செய்தி வாசகத்தின் மையக்கருத்து. நாம் அனைவருமே நமது அனுபவத்தின் அடிப்படையில், நமது அறிவின் அடிப்படையில், நமது ஆளுமையின் அடிப்படையில் சிந்திக்கிறோம். முடிவெடுக்கிறோம். உண்மை என்று நம்புகிறோம். ஆனால், அது சரி என்று நம்மால் சொல்ல முடியாது. காரணம், நமது அறிவும், ஆற்றலும், ஆளுமையும் வரையறைக்கு உட்பட்டது. ஆனால், கடவுள் எல்லைகளைக் கடந்தவர். ஐந்து குருடர்கள் கதையை நாம் கேள்விப்பட்டிருப்போம். ஐந்து பேரும் யானையின் ஒவ்வொரு பகுதியைத் தொட்டுப்பார்த்து, அதுதான் யானை என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதில் உண்மை இருந்தது. ஆனால், அது தான் உண்மை என்று ஆகாது. முழுமையாகப் பார்க்கக்கூடிய மனிதரால் தான், உண்மையை அறிந்து கொள்ள முடியும். அதேபோலத்தான், கடவுள் மட்டும் தான் உண்மையை அறிந்திருக்கிறவராக இருக்கிறவர். அவரைத் தவிர வேறுயாருக்கும் அந்த வல்லமை கிடையாது. நம்மால் எதனுடைய உண்மையையும் அறிந்து கொள்ள முடியாது என்றாலும், எந்த ஒரு நிகழ்வையும் நாம் கடவுளின் பார்வை கொண்டு பார்க்க வேண்டும். கடவுளின் பார்வையில் பார்க்கிற போது, நிச்சயமாக சாதாரணமான பார்வையைவிட, ஒரு நிகழ்வை சிறப்பாக பார்க்க முடியும். அந்த வல்லமையை கடவுளிடம் நாம் கேட்போம்.